**சுருக்கம்**

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் – தமிழ்நாட்டில், ‘‘ஏழை மகளிரை குடும்பத் தலைவராகக் கொண்ட குடும்பங்களுக்கான புதிய சிறப்பு வாழ்வாதாரத் திட்டம்’’ நடப்பு ஆண்டில் ஒப்பளிப்பு செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ம.அ தி3) துறை**

**அரசாணை (நிலை) எண்.82** **நாள்: 25.05.2015**
**மன்மத, வைகாசி – 11**
**திருவள்ளுவர் ஆண்டு**

**படிக்கப்பட்டது :**

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநரின் கடித எண்.002104/TNSRLM(LH)/2015 நாள்:20.05.2015

****

**ஆணை :**

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநரின் கடிதத்தில் 2011ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் தமிழகத்தில் 7.21 கோடி மக்கள் உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் 1.85 கோடி குடும்பங்கள் தமிழ்நாட்டில் உள்ளதாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றும் இதில் மக்கள் தொகை கணக்கெடுப்பு புள்ளிவிவரங்களின்படி மாநிலத்தில் **25.88 இலட்சம் மகளிரை குடும்ப தலைவராகக் கொண்ட குடும்பங்கள் உள்ளதாகவும் இது மாநிலத்தில் உள்ள மொத்த குடும்பங்களின் எண்ணிக்கையில் 13.97% ஆகும்** என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒரு குடும்பத்தில் விவாகரத்து, பிரிந்திருத்தல், இடம் பெயர்தல், திருமணம் ஆகாமல் அல்லது விதவையாக இருத்தல், ஆகிய காரணங்களினால் வயது வந்த ஆண்கள் இல்லாமல் இருத்தல் அல்லது வயது வந்த ஆண்கள் இருந்தும் குடும்ப வருமானத்திற்கு பங்களிப்பு இல்லாமல் இருத்தல் ஆகிய குடும்பங்களே மகளிரை குடும்ப தலைவராகக் கொண்ட குடும்பம் ஆகும். **இவர்கள் பொதுவாக சமுதாயத்தில் பொருளாதார மற்றும் சமூக ரீதியில் மிகவும் நலிவுற்ற குடும்பங்களைச் சார்ந்தவர்களாக உள்ளனர்.**

2. மகளிர் முன்னேற்றத்தை உறுதிசெய்ய அவர்களை ஒத்திசைந்த சுய உதவிக் குழுக்களாக அமைத்து, தொடர் சேமிப்பினை ஊக்கப்படுத்தி, பயிற்சிகளின் மூலமாக சுய மற்றும் நிறுவன வேலைவாய்ப்பு அளித்து, சமூக பொருளாதார மேம்பாடு அடையச் செய்வதற்கு தமிழ்நாடு அரசு தொடர்ந்து முன்னுரிமை அளித்து வருகிறது. ஊரக மற்றும் நகர்புற ஏழை பகுதிகளில் வசிக்கும் மகளிரை வலுப்படுத்தும் வகையில், பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதன் பின்னணியில் மகளிரை குடும்பத் தலைவராகக் கொண்ட ஏழை குடும்பங்களை மேம்பாடுத்த சிறப்பு கவனம் செலுத்தும் வகையில் ஒரு திட்டத்தை செயல்படுத்துவது கட்டாயமாக கருதப்படுகிறது.

3. ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் உள்ள மகளிரை குடும்பத் தலைவராகக் கொண்ட ஏழை குடும்பங்களுக்கு உதவும் பொருட்டு, வேலைவாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சி / வாழ்வாதார நடவடிக்கைகளுக்கான பயிற்சி மற்றும் நிதி உதவி ஆகியவற்றுடன் கூடிய புதிய திட்டத்தினை **2015–16** ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட உள்ளது.

திட்டத்தின் சிறப்பம்சங்கள்

i. மகளிரை குடும்பத் தலைவராகக் கொண்ட குடும்பங்களைக் கொண்டு சிறப்பு குழுக்கள் அமைத்தல் (குறைந்தபட்சம் 5 உறுப்பினர்கள்)
ii. சிறப்பு வாழ்வாதார குழுக்கள் அமைப்பதன் மூலம் வாழ்வாதார நடவடிக்கைகள்
iii. 1 முதல் 3 மாதம் வரை சுய வேலைவாய்ப்பிற்கான குறுகிய கால திறன் பயிற்சி
iv. 18 முதல் 45 வயது வரை உள்ள தகுதி வாய்ந்த பயனாளிகளுக்கு 3 முதல் 12 மாதம் வரையிலான வேலைவாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சி
v. பொருளாதார நடவடிக்கைகளுக்காக வட்டி மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் இணைப்பு.

இத்திட்டத்தின் நோக்கம் மகளிரை குடும்பத் தலைவராகக் கொண்ட குடும்பத்தின் வருமானத்தை பெருக்குவதாகும். இத்தகைய குடும்பங்களின் தலைவர் அல்லது தகுதியுள்ள உறுப்பினர்களுக்கு வேலைவாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சி அல்லது வாழ்வாதார பயிற்சி மற்றும் பிற உதவிகள் சுய மற்றும் நிறுவன வேலைவாய்ப்பிற்காக வழங்கப்படும்.

மகளிரை குடும்பத் தலைவராகக் கொண்ட குடும்பங்களுக்கான சிறப்பு வாழ்வாதார திட்டத்திற்கான வழிகாட்டி நெறிமுறைகள் இந்த ஆணையுடன் இணைக்கப்பட்டுள்ளது.

4. செயல் மற்றும் நிதி இலக்கு

i. **மகளிரை குடும்பத் தலைவராகக் கொண்ட குடும்பங்களில் உள்ள விருப்பமுள்ள ஏழை பயனாளிகள் அனைவரையும் 2015–16 ஆம் ஆண்டு தொடங்கி ஐந்து ஆண்டுகளில் இத்திட்டத்தில் இணைக்க** உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ii. திறன் பயிற்சி / வட்டி மானியத்துடன் கூடிய வாழ்வாதார உதவிக்காக ஒரு பயனாளிக்கு சராசரியாக ரூ.10,000 முதல் ரூ.20,000 வரை செலவிடப்பட உள்ளது. இத்திட்டத்திற்காக **ஐந்து ஆண்டுகளில் ரூ.750 கோடி** செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. கூடுதலாக 5% நிர்வாக செலவிற்காக ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படும்.

iii. **2015–16 ஆம் ஆண்டு இத்திட்டத்திற்காக ரூ. 100 கோடி ஒதுக்கீடு** செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

5. நிதி ஆதாரம்

இத்திட்டத்திற்கு தேவையான நிதியினை தமிழ்நாடு மாநில திறன் மேம்பாடு இயக்கம் மட்டும் அல்லாது நகர்ப்புற மற்றும் கிராமப்புற பகுதிகளில் செயல்படுத்தப்பட்டுவரும் பல்வேறு வாழ்வாதார இயக்க திட்டங்களிலிருந்தும் மேற்கொள்ளப்படும். கூடுதலாக நிதி தேவைப்படும் பட்சத்தில் மாநில அரசு மூலம் வழங்கப்படும்.

**6.** தமிழ்நாட்டில் கிராம மற்றும் நகர்ப்புற பகுதிகளில் **2015–16**ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட இருக்கும் புதிய திட்டமான ஏழை மகளிரை குடும்பத் தலைவராகக் கொண்ட குடும்பங்களுக்கு வேலைவாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சி, வாழ்வாதார நடவடிக்கைகளுக்கான பயிற்சி மற்றும் நிதி உதவி என்ற புதிய திட்டத்தினை செயல்படுத்திட தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் அவர்கள் ஆணை கோரியுள்ளார்.

7. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் அவர்களின் கருத்துருவை கவனமாக ஆராய்ந்தபின் அதனை ஏற்கலாம் என்று முடிவு செய்து தமிழ்நாட்டில் உள்ள கிராம மற்றும் நகர்ப்புறங்களில் வாழும் ஏழை மகளிரை குடும்பத் தலைவராகக் கொண்ட குடும்பங்களுக்கான புதிய சிறப்பு வாழ்வாதார திட்டத்தினை 2015–16 ஆம் ஆண்டில் செயல்படுத்திட தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநருக்கு அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி )

ககன்தீப்சிங் பேடி,
அரசுச் செயலாளர்.

பெறுநர்

மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், சென்னை –600 034.
தலைமை கணக்காயர், சென்னை – 600 009.

<u>நகல்</u>

1. முதலமைச்சரின் அலுவலகம், சென்னை – 600 009.
2. நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றம் மற்றும் சிறைச்சாலைத் துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.
3. அரசு செயலரின் முதுநிலை தனிச் செயலர், ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறை, சென்னை–9.
4. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, (அநமு.2), சென்னை – 600 009.
5. தேசிய தகவல் மையம், சென்னை – 600 009.

// ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.

# மகளிரை குடும்பத் தலைவராகக் கொண்ட குடும்பங்களுக்கான சிறப்பு வாழ்வாதாரத் திட்டம் – வழிகாட்டு நெறிமுறைகள்

**i) செயல்படுத்தப்படும் பகுதி**

தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களில் உள்ள ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

**ii) செயல்படுத்தும் முகமை**

மாநில அளவில் **தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்** இத்திட்டத்தினைச் செயல்படுத்தும் முகமையாகும். மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர் இத்திட்டத்தினை ஊரகப் பகுதிகளில் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் (சுய உதவிக் குழு மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள்) போன்ற சமுதாயம் சார்ந்த அமைப்புகள் மூலமும் நகர்ப்புற பகுதிகளில் உள்ளாட்சி அமைப்புகளின் மூலமும் செயல்படுத்திட பொறுப்பாவார். ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டு வரும் வாழ்வாதாரத் திட்டத்தினையும் தற்போது செயல்படுத்தப்படவுள்ள இச்சிறப்பு திட்டத்தினையும் ஒருங்கிணைக்கும் வகையில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மற்றும் தேசிய நகர்ப்புற வாழ்வாதாரத் திட்டம் ஆகியவற்றின் செயல்பாடு தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின்கீழ் கொண்டு வரப்படும்.

**iii) பயனாளிகள் தேர்வு**

1) 2011–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மகளிரை குடும்பத் தலைவராகக் கொண்ட குடும்பத்தினர் குடும்பம் அல்லது அவர்களது குடும்பத்திலுள்ள 18 வயது முதல் 45 வயதிற்குட்பட்ட ஆண் அல்லது பெண் உறுப்பினர்களோ இச்சிறப்பு வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் பயனாளியாக தகுதி உடையவர் ஆவார்.

2) ஊரகப் பகுதிகளில் மகளிர் திட்டம் அல்லது புது வாழ்வுத் திட்டத்தால் ஈடுபடுத்தப்பட்டுள்ள சமுதாய வல்லுநர்கள் (வேலை வாய்ப்பு) மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார திட்டத்தின் மூலம் ஈடுபடுத்தப்படவுள்ள சமுதாய ஒருங்கிணைப்பாளர் அல்லது சமுதாய அமைப்பாளர்கள் மூலமாக தகுதிவாய்ந்த நபர்கள் கண்டறியப்படுவார்கள்.

3) ஏழ்மை நிலையில் உள்ள மகளிரை தலைவராகக் கொண்ட குடும்ப உறுப்பினர்களுக்கு திறன் பயிற்சி அல்லது வாழ்வாதார நடவடிக்கைக்கான பயிற்சி / நிதி உதவி அளிக்க ஊரகப் பகுதிகளில் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு அல்லது கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மூலமாகவும் நகர்ப்புற பகுதிகளில் உள்ளாட்சி அமைப்புகளாலும் பயனாளிகள் முன்னுரிமை படுத்தப்படுவர். பயனாளிகள் கண்டறியப்பட்ட பின்னர் ஊரகப் பகுதிகளில் கிராம சபை மூலமாகவும், நகர்ப்புறங்களில் உள்ளாட்சி அமைப்புகளாலும் ஒப்புதல் அளிக்கப்படுவார்கள்.

**iv)** பயிற்சிக்கான தொழில்கள் தெரிவு செய்தல்

1) **கலந்தாய்வு:** நிலையான மற்றும் தொழில் வளர்ச்சியினை அடிப்படையாகக் கொண்ட வேலை வாய்ப்பினை வழங்கக்கூடிய தொழில்களில் பயனாளிகளுக்கு பயிற்சி வழங்குவது மிகவும் இன்றியமையாததாகும். வழங்கப்படும் பயிற்சிகளில் பயனாளிகளின் விருப்பத்தினை அறிந்து கொள்வது மிகவும் முக்கியமானதாகும். பயனாளிகள் தெரிவு செய்யப்பட்ட பின்னர், ஊரகப் பகுதிகளில் ஊராட்சி அளவிலும் நகர்ப்புற பகுதிகளில் வார்டு அளவிலும் கலந்தாய்வு நடத்தப்பட வேண்டும். இதன்மூலம் பயனாளிகள் தமக்கு தேவையான தொழில்களில் பயிற்சி பெறுவதற்கும் அல்லது உதவி பெறுவதற்கும் வழிவகை செய்யப்படும்.

2) **இரண்டு வகையான உதவிகள்:** மகளிரை தலைவராகக் கொண்ட குடும்பத்தைச் சேர்ந்த பயனாளிகளுக்கு இரண்டு வகையான உதவிகள் வழங்கப்படுகிறது,
   - நிறுவனங்களில் உறுதியான வேலை வாய்ப்புடன் கூடிய திறன் வளர்ப்பு பயிற்சி
   - சுய வேலைவாய்ப்பிற்கான திறன் வளர்ப்பு பயிற்சியுடன் தனிநபர் அல்லது ஒத்த தொழில் செய்வோருக்கு கூட்டாக தொழில் செய்வதற்காக வட்டி மான்யத்துடன் கூடிய கடன் உதவி

3) **பணியமர்த்துதலுடன் கூடிய பயிற்சி வகைகள்:** பயனாளியின் விருப்பம் மற்றும் தகுதி, பயிற்சி வசதிகள் மற்றும் வேலைவாய்ப்பு கிடைக்கக் கூடிய தொழில்கள் ஆகியவற்றின் அடிப்படையில் பயிற்சிகள் வழங்கப்படும். ஆடைத் தயாரிப்பு, சில்லரை வணிகம், அழகு நிலையம், கணினி இயக்கம், கட்டுமானம், மின்னணு சாதனங்கள் பழுது நீக்கம், தோல் பொருள் உற்பத்தி, இலகுரக வாகன இயக்கம், செயற்கை ஆபரணங்கள் மற்றும் பேருந்து நடத்துனர் பயிற்சி போன்ற பயிற்சிகள் வழங்கப்படும்.

4) **சுய வேலைவாய்ப்புடன் கூடிய திறன் வளர்ப்பு பயிற்சி:** சுய வேலைவாய்ப்பு அல்லது ஒத்த தொழில் செய்ய ஆர்வமுள்ள பயனாளிகள் கண்டறியப்படுவார்கள். இவர்களுக்கு வாழ்வாதாரம் தொடர்பான திறன் மற்றும் திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வழங்கப்படும். அதன்பின்னர் தனிநபர் அல்லது குழுவாக உள்ள பயனாளிகளுக்கு வட்டி மானியத்துடன் கூடிய கடன் வசதி, வங்கிகள்/ கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மூலம் வழங்க ஏற்பாடு செய்யப்படும். மகளிர் தலைமையில் செயல்படும் குடும்பங்களில் உள்ள மகளிருக்கென சிறப்பு குழுக்கள் முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் குழுக்கள் போன்று 5 அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களை கொண்டு அமைக்கப்படும். அவ்வாறு அமைக்கப்படும் குழுக்களுக்கு வட்டி மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் தவிர பொது கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்த புதுவாழ்வு திட்ட வழிமுறைகளின்படி ரூ.1.00 இலட்சம் வரை நிதி வழங்கப்படும்.

**v) தொழில் பயிற்சி நிறுவனங்களை தேர்வு செய்தல்**

சிறந்த உட்கட்டமைப்பு வசதி, பயிற்சியாளர் மற்றும் கடந்த ஆண்டுகளில் பயிற்சி மற்றும் பணியமர்த்துதல் ஆகிய விபரங்களின் அடிப்படையில் சிறந்த பயிற்சி நிறுவனங்கள் தேர்வு செய்யப்பட்டு, அந்நிறுவனங்களில் திட்டத்தில் கண்டறியப்பட்ட பயனாளிகளுக்கு பயிற்சிகள் வழங்கப்படும். ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியர் தலைமையின் கீழ் அமைக்கப்பட்டுள்ள திறன் மேம்பட்டு பயிற்சி நிறுவனத் தேர்வுக் குழுவின் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் பயிற்சி நிறுவனங்களில் இத்தொழில் பயிற்சிகள் வழங்கப்படும். தகுதியில்லாத நிறுவனங்களைக் களைந்தெறிய, தேர்வுக்குழுவானது கடுமையான மதிப்பீட்டு காரணிகளை பயன்படுத்தும்.

பயிற்சியின் தரத்தை உறுதிசெய்ய அரசு நிறுவனங்களான தொழில்துறை தொழில் நுட்ப நிறுவனம் (ITI), பல தொழில் நுணுக்கங்களை கற்பிக்கும் நிறுவனம் (Polytechnic), தொழில்நுட்ப கல்வி இந்திய கவுன்சில் (AICTE), தொழில்பயிற்சி தேசிய கவுன்சில் (NCVT) ஆகியவற்றால் அங்கீகாரம் செய்யப்பட்ட நிறுவனங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**vi) பயிற்சியின் கால அளவு மற்றும் பயிற்சிக்கான தொகை**

1) தேவையின்அடிப்படையில் தங்கி மற்றும் தங்காமல் பயிலும் பயிற்சிகள் பொதுவாக 1 முதல் 12 மாதம் வரை அளிக்கப்படும் பயிற்சிகளின் கால அளவானது பாடத்திட்டத்தின் பயன்பாடு மற்றும் பயிற்சித் தேவை ஆகியவற்றின் அடிப்படையில் நிர்ணயம் செய்யப்படும்.

2) திறன்பயிற்சி அல்லது வட்டி மானியத்துடன் கூடிய வாழ்வாதார உதவிக்கு ரூ.10,000/– முதல் ரூ.20,000/– வரை 1 பயனாளிக்கு செலவிடப்படும்.

3) தேசிய அளவில் வெற்றிகரமான முன்மாதிரியாக திகழும் புதுவாழ்வுத் திட்ட வழிமுறைகளின்படி பயிற்சி நிறுவனங்களுக்கான பயிற்சி தொகை, பயனாளிகள் பயிற்சி முடித்து சுய வேலை அல்லது நிறுவனங்களில் பணியமர்வு செய்த பின்னரே முழுமையாக வழங்கப்படும். பயிற்சி நிறுவன கட்டணத் தொகையில் 80% பயிற்சி முடித்தவுடனும், மீதம் 20% பயனாளிகள் குறைந்தபட்சம் ஒரு மாதத்திற்கு வேலையில் அமர்த்தப்பட்டதற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் வழங்கப்படும்.

4) மேற்கண்ட செயல்முறைகளினால், குடும்பத்தை வழிநடத்தும் பெண்கள் பயிற்சி பெறுவதோடு மட்டுமல்லாமல் சம்மந்தப்பட்ட பயிற்சி நிறுவனங்கள் மூலம் வேலைவாய்ப்பு பெறுவதையும் உறுதி செய்கிறது.

5) தேவையின் அடிப்படையில் சுய வேலைவாய்ப்பு மேற்கொள்ள விருப்பமுள்ள பயனாளிகளுக்கு தொழில் மற்றும் தொழில் மேம்பாட்டு பயிற்சிகள் வழங்கப்படும். பொருளாதார வாழ்வாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பயனாளிகளுக்காக வங்கிகள் / கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள்/ ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மூலம் வட்டி மானியத்துடன் கூடிய கடன் வசதிகள் ஏற்படுத்தித் தரப்படும். மேலும் ரூ.1.00 இலட்சம் வரை தேவையின்அடிப்படையில் வாழ்வாதார நிறுவனங்களுக்கு பொது கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த வழங்கப்படும்.

**vii)** பயிற்சி கண்காணிப்பு

1) அதிகாரிகள் தவிர, கிராமப்புறங்களில் உள்ள சமுதாயம் சார்ந்த அமைப்புகளான சுய உதவிக் குழு, ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மற்றும் நகர்ப்புற பகுதிகளில் உள்ள உள்ளாட்சி அமைப்புகள் ஆகியவற்றிற்கும் இப்பயிற்சிகளை கண்காணிக்கும் பொறுப்புகள் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2) கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களுக்கு கிராம ஊராட்சித் தலைவர், அலுவல் சாரா தலைவராக இருப்பதால் கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளும் பயிற்சி கண்காணிப்பு பணிகளில் ஈடுபடுத்தப்படும். பயிற்சிக்கான தொகை ஊரக பகுதிகளில் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் அல்லது ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கும், நகர்ப்புற பகுதிகளில் சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பிற்கும் வழங்கப்படும். ஊரகப் பகுதிகளில் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் நகர்ப்புற பகுதிகளில் உள்ளாட்சி அமைப்புகள் பயிற்சி நிறுவனங்களுக்கு பயிற்சியின் தரத்தினை சமூக கண்காணிப்பின் மூலம் உறுதி செய்த பின்னர் பயிற்சி தொகையினை வழங்கும்.

மகளிரை குடும்பத் தலைவராகக் கொண்ட குடும்பங்களுக்கான சிறப்பு வாழ்வாதாரத் திட்டத்தின் வழிகாட்டு நெறிமுறைகளை, தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநருடன் கலந்து ஆலோசித்து தேவைக்கேற்ப திருத்தங்களை மேற்கொள்ள ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அரசுச் செயலாளருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

ககன்தீப்சிங் பேடி,
அரசுச் செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்